# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :26 April 2025 கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்**
முனைவர்.வி.சேகர்

**தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்**
கு.செந்தமிழ்செல்வி

**எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்**
ஆ.கவிதா

**சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு**
மா.மகேஸ்வரி

**சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு**
ப. நந்தினி

**களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்**
திருமதி.கோ.சரண்யா

**புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணர்த்தும் போர்**
ப.சிவாஜி

**பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்**
இரா.தீபலெட்சுமி

**பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி**
இரா.ஹேமலதா

**சிலம்பில் அரசியல்**
மு.உமாமகேஸ்வரி


**அட்டைப்படம் உதவி**
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்**
**முனைவர் ச.வைத்தீஸ்வரன்**

**திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்**
**முனைவர் ஹ.விஜயலட்சுமி**

**பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்**
**ப.பிரபு**

**திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்**
**சா.ஜனார்த்தனன்**

**சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்**
**திருமதி நா.நித்யா**

**நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்**
**கி. ராஜ்குமார்**

**தர்காவும் விளிம்புநிலை மக்களும்**
**முனைவர் மௌ.அஸ்கர் அலி**

**இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்**
**முனைவர் நா. ஜிதேந்திரன்**

**சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு**
**ரா.சந்தியா**

**ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'**
**ரா.ஹேமா சிவகா**

**கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்**
**இரா.கலாவதி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

---
**நன்றி**

# அகத்தினுள்

இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்
ந.மஞ்சுளா

மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்
பத்மினி. S

EASY LEARNING TECHNIQUES
PROF. Dr. Er. S. HARI PRASAD

Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools
Kanapathipillai Gnanaretnam

A Comparative Study Of Formal And Non-formal Education Systems
Shiyani Thevaruban

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு

The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu
P.PRAVEENKUMAR

Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums
Dr. S.Udhaya Kumar.

தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்
முனைவர் செ. சாந்தி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# மானிடவியல்

# தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்

*Tolkappiyam External Anthropological Values*

**முனைவர் செ.சாந்தி,**

இணைப்பேராசிரியர்,

முதுகலைத்தமிழ்த்துறை,

அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

**ஆய்வுச்சுருக்கம்:**

தொல்காப்பியம் பற்றிய அறிமுகம் சிறிதும் இல்லாதவர்கள் அதனைப் பழமையான காவியம் என்று பொருள் உணர்ந்து கொள்ள இடமுண்டு. அது நன்னூல், நேமிநாதம், இலக்கண விளக்கம், அகப்பொருள் மற்றும் புறப்பொருள் நூல்களுக்கு இதுவே முன்னோடி தமிழ் இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது ஆனால் இந்நூலுக்கு முன்னும் வேறு சில இலக்கண நூல்கள் இருந்திருக்கக்கூடும் என்பதனைத் தொல்காப்பிய நூற்பாக்களே சான்று உரைக்கின்றன. முதல் நூலாக இல்லாவிட்டாலும் முழுமையாகக் கிடைக்கப் பட்ட இலக்கண நூல் என்பது மறுப்பதற்கில்லை. தமிழர்களின் வரலாற்றுக் கருவூலமாகவும் மானுட விழுமியங்களின் களஞ்சியமாகவும் திகழ்கிறது. அது மன்னரும் மக்களும் ஒன்றிணைந்து வாழ்ந்த சமுதாயசித்திரிப்பு, தமிழரின் பண்பாட்டு வளர்ச்சியினை எடுத்தியம்பும் சொற்குவியல். இக்கட்டுரை புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்களைக் குறித்து ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்** : தொல்காப்பியம், புறத்திணையியல், மானுட விழுமியங்கள்

***Abstract :***

*Those who have no prior knowledge of the Tolkappiyam may understand it as an ancient epic. It is the oldest of the Tamil grammar books, preceding the Nannul, Neminatham, Grammar Explanation, Intema and Outma books, but the Tolkappiyam texts themselves testify that there may have been some other grammar books before this book. Although it is not the first book, it is undoubtedly the most complete grammar book available. It is a historical treasure trove of Tamils and a repository of human values. It is a social portrait of a society where the king and the people lived together,*

*and a collection of words that illustrates the cultural development of the Tamils. This article examines the anthropological values of purathinaiyiyal.*

***Keywords :*** *Tolkappiyam, extra-linguistics, human values*

**முன்னுரை:**

தொல்காப்பியர் என்பவரால் இயற்றப்பட்டதால் இந்நூலுக்குத் தொல்காப்பியம் என்ற பெயர் உண்டாயிற்று. நூலை எழுதியவர் பெயரை நூலுக்குச் சூட்டுவது எல்லா மொழிகளிலும் கடைபிடிக்கப்பெறும் பழம் மரபு. ஆகையால் நூலை ஆக்கியோன் பெயரைச் சூட்டியுள்ளதை இதன் மூலம் அறிய முடிகிறது. நூலாசிரியரான தொல்காப்பியர் அகத்திய முனிவரின் பன்னிரு மாணாக்கர்களில் ஒருவராவார். இவர் குறித்த புராணக்கதைகள் பலவுண்டு. எவ்வாறாயினும் தொல்காப்பியர் தமிழ் நாட்டிலே காப்பியக்குடி என்னும் பழங்குடியிலே தோன்றிய தமிழ் மரபினர். தமிழையும் வட மொழியையும் கற்றுணர்ந்த தமிழ்ப்புலவர் என்பதில் ஐயமில்லை.

"ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப்பியனும்" (பன்னிரு படலம் — பாயிரம்)

என்கிற பன்னிரு படலத்தின் பாயிரச் செய்யுள் அகத்தியமே முதல் நூல் என்றும் தொல்காப்பியம் வழி நூல் என்றும் மொழிகிறது. அத்தோடு தமிழ் இலக்கண நூல்கள் ஐந்து வகைப்படும் எனக்கூறும் கொள்கைப் பண்டைத் தமிழ்ச்சமூகத்தில் உண்டு. ஆனால் தொல்காப்பியர் தனது இலக்கண நூலை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பிரிவின் வகைப்பட்டே பிரித்தார். இலக்கண விளக்கம் என்னும் நூல் தொல்காப்பியத்தைப் பின்பற்றி எழுதப்பட்டதால் குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப்படுகிறது. பண்டைத் தமிழருக்குத் தனி நாகரிகம் இல்லை. அவர்களுக்கு வடக்கிலிருந்து வந்த ஆரியர்களே நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்தனர் என்கிற தவறான புரிதலுண்டு, இதற்கு உலகிலே தமிழர் நாகரிகமே மிகப் பழமையானது. தலை சிறந்தது. நாம் இக்காலத்தில் என்னென்ன வேண்டும் என்று நினைக்கிறோமோ இவைகள் எல்லாம் பண்டைத் தமிழ் நாகரிகத்திலே படிந்து கிடந்தன. பழந்தமிழர்கள் சாதி வேற்றுமை பாராட்டதவர்கள், கடவுள் நம்பிக்கை அற்றவர்கள், மூடப்பழக்க வழக்கங்கள் அறியாதவர்கள்... என்றவாறு தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சியுரை எழுதிய மு. ராகவய்யங்கார் தெரிவிக்கிறார்.

**மானுட விழுமியங்கள்:**

மக்களின் வாழ்க்கையை, அவர்கள் பின்பற்றிய மானுட விழுமியங்களை அகம், புறம் என இரு பிரிவுகளாகப் பிரித்தனர். அகம் என்பது காதல், இல்லறம், தனிப்பட்ட மனிதனின்

வாழ்வு பற்றியது. உள்ளத்துள் நிகழ்கின்ற அல்லது நுகருகின்ற இன்பம் என்பதால் அது வெளியில் பகரப்படாதது, மறை பொருளானது. அகம் அல்லாதன அனைத்தும் புறம். வீரம், போர், கொடை, கொடை மறம் முதலானவை புறத்துள் அடங்கும். பலரும் அறிய நுகர்வதும் இன்னதென வெளிப்படக் கூடியதுமான யாவும் புறம் என்றுரைப்பர் உரையாசிரியர்கள். பண்டைத் தமிழர்கள் போரையும் கலையாக்கிக் கொண்டனர். தன் நாட்டின் மீது படையெடுத்து வரும் எஞ்சா மண்ணசை வேந்தனை தடுத்து நிறுத்தி வெல்லுதல் வஞ்சி என்றும், தன் வலிமை ஒன்றையே உலகினுக்கு உணர்த்த விரும்பிய வேந்தனது வலிமையை அழித்து வெல்லுதல் தும்பை எனவும் பிரித்துத் துறை வகுத்ததன்வழி போர் என்பது தற்காப்புக்காக வும், முறை கடந்து நாடு பிடிக்கும் விருப்பிலும் வலிமையை நிலை நாட்டும் நோக்கில் வரும் அரசரை அடக்கிச் செந்நெறிப் படுத்துவதற்காகவும் மேற்கொள் ளப்பட வேண்டிய ஒன்று" என்பார் இலக்குவனார். (இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல், ப-136)

**போர் - அறமும் அறப்பிறழ்ச்சியும்**

போர் மனிதற்கு இயல்பானது. 'ஒருவனையொருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று, இவ்வுலகத்தியற்கை' (புறம்-76) என்கிற சங்கப் புலவர் கூற்று வழிப் போர் மனித வாழ்வில் இன்றியமையாத பகுதி எனக்கூறப்பட்டது. கூதிர் காலமும் வேனிற் காலமும் போர் செய்வதற்குரிய பொழுதுகளாகத் தேர்வு செய்யப்பட்டன. போருக்குச் செல்லும் மன்னர்கள் தங்களுக்கான அடையாளப் பூக்களைச் சூடியிருப்பர் இவை போர் அறங்களில் முக்கியமாகக் கடைபிடிக்கப்பட்டன. சங்ககாலப் போர்களில் நிரை கவர்தல், நிரை மீட்டல் முக்கிய இடம் பெற்றுள்ளன. தொல்பழங்கால ஆநிரை கவர்தலே பிற்காலத்தில் நாடுபிடிச் சண்டையாக வளர்ந்திருக்க வேண்டும். கால்நடைக்கு நடைபெற்ற சண்டைகள் நிலத்துக்கான திட்டமிட்ட படையெடுப்புகளாக இழிந்து ஒரு முறையான தொழிலாகி விட்டது என்று பிரடிக் ஏங்கெல்சு கூறுகிறார். (கோவைவாணன், சங்க இலக்கிய மெய்யியல், ப-79) புறமுதுகு காட்டாமை, புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருத்தல், போர் மூளும் நாட்டில் ஆக்கள், பார்ப்பனர், பிணியுடையோர். புதல்வர்ப் பெறாதவர்களைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லும்படி அறிவிப்பது முதலான அறக் கோட்பாடுகள் போரில் பின்பற்றப்பட்டுள்ளன.

போர் என்றவுடன் மகிழ்ந்து துள்ளியெழுந்து ஆரவாரம் செய்த போர் வீரர் களைப் பற்றிப் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலான இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. புறமுதுகு காட்டாமல் போரில் வீரமரணம் அடைந்த மகனின் உடலைக் கண்ட தாயின் வற்றிய மார்பில் பால் ஊறியதையும் (புறம் 295) வீரமின்றி புறமுதுகு காட்டி ஓடியிருப்பானாயின் அவன் பாலுண்ட மார்பை அறுத்தெறிவேன் (புறம் 278) என்று வஞ்சினம் கூறிய தாயின் வீரத்தையும் புறநானூறு எடுத்துரைக்கும். ஒவ்வொரு மன்னனும் தங்களுக்கு விருப்பமன ஒரு மரத்தை வளர்க்கலாயினர். மன்னனால் வளர்க்கப்பட்ட மரமாதலால் வீரர்கள் கூடுதல் கவனத்துடனும்

காவலுடனும் பார்த்துக் கொண்டனர். அதுவே பின்னாளில் மன்னனுக்குரிய காவல் மரமாயிற்று. போர் செய்ய விரும்பும் மன்னன் பகை மன்னனின் காவல் மரத்தினைக் கைப்பற்றினால் போதும் அந்நிகழ்வு அம்மன்னன் போரில் தோற்றதற்குச் சமமாகக் கருதப்பட்டது. இதனால் படை இழப்பும் வீரர்களின் அழிவும் நேராது என்பார் இலக்குவனார் (மேலது, ப-140) இது அறப்போராகக் கருதப்படும்.

இவ்வாறு அறத்தோடும் மறத்தோடும் போரிட்ட மன்னர்களின் மனதில் பிறழ்ச்சி ஏற்பட்டது. பின்னாளில் போரிட்டு நாடு பிடித்தல் மன்னர்களுடைய பெருவேட்கையானது.“பிறனாளும் நாடுகோள் மன்னர் தொழில்“ (நான்மணி -85) என்று மன்னர்களின் தொழில் போரானது. அறம் மாற்றம் பெற்றது."பகைவரை முரசமொடு கைக்கொள்ளாது போயின் குடிபழித் தூற்றும் கொடுங்கோன் ஆகுக எனப் பாண்டிய நெடுஞ்செழியனும், பகைவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்யாது போயின் என் தேவியை இழப்பேனாக எனப் பூதப்பாண்டியனும் வஞ்சினம் உரைத்த செய்தியைப் புறநானூறு நூல் வழி அறிய முடிகிறது. இது போர் அறமாகவும் கடைபிடிக்கப்பட்டது. போர்க்களத்தில் இறந்துபட்ட வீரன் மேனிலை உலகை (துறக்க உலகம்) எய்துவான் என்ற கற்பிதம் வீரர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. சாதாரண போர் வீரனும் மேனிலை உலகை அடைவதற்குப் போர்களத்தில் மடியவேண்டும் என விரும்பினான். குழவிபிறப்பினும் ஊன்தடி பிறப்பினும் அஃது என்று அதனை வாளால் பிளப்பர் (புறம்-74) என்கிற புலவர்தம் வாய்மொழியும் போருக்கு வித்திட்டன. சங்க இலக்கியத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் எல்லாச் சான்றுகளும் போருக்குப் பின் காருணிய மனப்பான்மை வென்றோர்க்கு இருந்ததில்லை என்பதைக் காட்டுகிறது. மறக்க முடியாத இகழ்ச்சிகளைத் தோற்றோர் மீது சுமத்துதல் மரபாயிற்று. இதனால் போர்கள் வளரலாயின. (சுப்பிரமணியன் ந. சங்ககால வாழ்வியல்,பக்-174. 175) வெற்றி என்பதே இலக்கானது, அறம் என்பது மறைந்து போனது பிறழ்ச்சியும் நேரிட்டது. அவ்வாறு படையெடுத்துச் சென்று வென்ற மன்னன் கொள்ளையிட்டு வந்த செய்தியைப் பரிசின் மாக்கட்கு வரிசையினல்கி (புறம்-6) என்ற பாடல் வ ழியும் "பிறரைத் துன்புறுத்திக் கொண்டு செல்வத்தை நின் ஆர்வலர்களுக்குக் கொடுத்து மகிழ்ச்சிப்படுத்துகின்றாய்” என்று இடித்துரைத்தமையை,

”இன்னா வாகப் பிறர்மண் கொண்டு
இனிய செய்தி நின்னார்வலர் முகத்தே” (புறம்-10)

என்கிற நெட்டிமையார் பாடல் வரிகள் போரில் அறம் பிறழ்ந்த நிலையைச் சுட்டிச் செல்கிறது. போர் நிகழுமிடத்து பகைவர் நாட்டு விளை வயல்களைக் கெடுப்பதும் நீர் நிலைகளைச் சிதைத்தழிப்பதும் நெல், கரும்பு முதலியன விளையும் மருத நிலங்களைப் பாழ் செய்வதும் மக்கள் குடியிருக்கும் ஊர்களைத் தீயிட்டு அழிப்பதும் அவர்தம் பொருளைச் சூறையாடுவதும்

நிகழ்வது குறித்தே இப்போர் நிகழ்ச்சி சான்றோர்களால் வெறுக்கப்படுகின்றது. இதனை இச்சான்றோர் விரித்தோதுவது வேந்தன் உள்ளத்தில் அறம் பிறப்பித்துப் போரைக் கைவிடுதல் கருதியே யென்றறிதல் வேண்டும்" என்பார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.(புறநானூறு, கழகப் பதிப்பு, ப- 46) இதே கருத்தினை வலியுறுத்தும் விதமாக, வென்ற வேந்தர்கள் தோற்ற அரசனின் முடியால் கழலும் ஆரமும் செய்தல், கடிமரத்தால் முரசம் செய்தல் ஆகியன வழக்கில் இருந்தன. வென்றதற்கு அறிகுறியாகக் கொடி உயர்த்திக் காட்டப் பட்டது. பொது மக்களுக்கு அவ்வெற்றி அறிவிக்கப்பட்டது. இவை போருக்குப் பின் நிகழும் அவலங்களாகும்.(இராமகிருட்டிணன் ஆ, தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்.ப-113) கூறிய கருத்தும் ஒப்பு நோக்கத்தக்கது ஆகும்.

மானுடவியல், விழுமியம் - விளக்கம்

மனித குலத்தைப் பற்றிய அறிவியல் மானுடவியல் எனப்படும். விழுமியம் என்பது தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைபிடிக்க வேண்டியதாகும். அன்பு, காதல், கருணை, ஒழுக்கம், அகிம்சை என மனிதனின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்தது விழுமியம் எனக்கருதலாம். மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகிறது. பொதுவாக, விழுமியம் என்பது மனிதர்கள் எதை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறார்களா அதனைக் குறிக்கிறது எனலாம். (விக்கிபீடியா)

விழுமியங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படலாம்

1. தனி மனித விழுமியங்கள்
2. பண்பாட்டு விழுமியங்கள்

இவற்றுள் தனி மனிதனுடைய வாழ்வை, ஒழுக்கத்தை நோக்கமாகக் கொண்டது தனி மனித விழுமியமாகும். ஒரு சமூகத்தில் பொதுவாக உள்ள விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகின்றன.

1.ஒரு சமுதாயத்தின் பண்பாடு என்பது அதன் உறுப்பினர்களின் அனைத்துத் தேவைகளையும் உயிரியல் உளவியல் உந்துதல்களையும் முழுமையாக நிறைவு செய்யப் பல நிறுவனங்களைக் கொண்ட அமைப்பாகும் என்பார் பக்தவத்சல பாரதி. (பண்பாட்டு மானுடவியல், ப-177)

2. பண்பாடு என்பது வாழ்வு பற்றிக் கொண்டுள்ள கொள்கை. மனித இனம். உலகம், கடவுள் முதலிய இவை பற்றிக் கொண்டுள்ள கருத்து ஆகியவற்றின் துணை கொண்டு மதிப்பிடப்படுவதாகும். மாறுதலுறும் நிலைக்கேற்ப அமையும் உடை, நடத்தை, சொல், எண்ணம். பழக்கம் முதலியவை பற்றி மதிப்பிடுவதற்கு உரியதன்று என்று பேரறிஞர் மாத்தியு ஆர்னல்டு கூறியுள்ளார். (இலக்குவனார் சி, இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல், ப-89)

3. பண்பாடு என்பது எண்ணற்ற கூறுகளால் இணைக்கப்பெற்ற ஒழுங்கமைவு ஆகும். கற்றுணர்ந்து பகிர்ந்து கொள்ளப்படும் நடத்தை முறைகளின் தொகுப்பு என்று

மானுடவியலாளர்கள் கூறுவர். (ஸ்டீபன்,தொல்காப்பியமும் இனவரை வியல் கவிதையியலும், ப-4)

**வெட்சிப் போர்**

மனிதநேயம் என்பது மக்கட்பண்பு. மனிதர்களிடம் மட்டுமின்றி பிற உயிர்களிடமும் மக்கட் பண்போடு நடந்து கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாதது ஆகும். அதனடிப்படையில் பழம் போரான வெட்சிப் போரில், தான் போரிட்டுக் கவர்ந்து வந்த ஆநிரைகளைப் பத்திரமாகப் பாதுகாப்பது ஒவ்வொரு வீரரின் கடமையாக, வீரமாகப் போதிக்கப்பட்டது. எனவே தான் ஆநிரைகளை வெறும் அஃறிணை உயிராகக் கருதாமல் வெற்றிக்குத் துணை நின்ற கடவுளுக்குச் சமமாகக் கருதிப் போற்றியுள்ளனர். போருக்கான காரணம் வேண்டுமானால் ஒருவர் மாட்டு நிகழலாம். வெற்றி என்பது ஒருவர் மாட்டு நிகழும் நிகழ்வதன்று. அந்த வெற்றிக்கு ஆநிரைகள் பெரும் பங்காற்றியுள்ளன.

தொல்காப்பியம் புறத்திணையியலில் முதல் திணை வெட்சித் திணையாகும் வீரர்கள் வெட்சிப் பூவைச்சூடிப் போரை நிகழ்த்துவதால் இதற்கு வெட்சிப் போர் என்ற பெயரும் உண்டு. போருக்கான முன்னேற்பாடுகளைக் கூறி விட்டு ஆநிரை கவர்தல் பின்னே நிகழும் மானுட விழுமியங்களை "ஆதந்து ஓம்பல்" (தொல் -1003) என்று தொல்காப்பியர் சுட்டிச் செல்கிறார்,

புறப்பொருள் வெண்பாமாலை ஆநிரை கவர்தலைத் தன்னுறு தொழில், மன்னுறு தொழில் என்றவாறு இருவகைப்படுத்தும். தன்னுறு தொழில் என்பது வீரர்கள் தாங்களாகவே ஆநிரை கவரச் செல்லும் போர். மன்னுறு தொழில் என்பது மன்னன் ஆணையின் படி ஆநிரை கவரச் செல்லும் போர் என்று விளக்கம் அளிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் கவர்ந்து வந்த ஆநிரைகளைத் துன்பப்படாமலும் துன்புறுத்தாமலும் தங்களது ஊருக்குக்கொண்டு சென்று அவற்றை ஒரிடத்தில் தொகுத்து நிறுத்தி அவற்றின் நோய். வழியிடைத் துன்பங்களைத் தீர்த்தல் முக்கியப் பணியாகக் கருதப்படுகிறது. ஆநிரைகளுக்கு நிகழும் நோய்களாக, வழியிடை ஓட்டி வந்த துன்பம். இரை உண்ணல், நீர் பருகல் முதலியவற்றை உரையாசிரியர் எடுத்துரைப்பர்.

வெட்சித் திணையின் துறைகளாகத் தொல்காப்பியம் கூறும் பதினான்கு துறைகளுக்குமான இலக்கியச் சான்றுகள் இல்லை. அவற்றுள் ஊர்கொலை, ஆகோள், பூசல்மாற்று, தந்துநிறை, பாதீடு துறைகளுக்கான இலக்கியச் சான்றுகள் மட்டுமே கிடைக்கப் படுகின்றன. கிடைக்கப்பெறும் தரவுகளின் அடிப்படையில் இவ் ஆய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது.

**ஊர்கொலை**

இரு வேந்தர்களுக்கும் இடையே போர் தொடங்குவதற்கு முன்னரே பகை மன்னனின் ஆநிரைகளைக் கவரும் குறும்போர் நடைபெறும். அப்போது வீரர்க ளும் ஊராரும் ஆநிரைக் கவர வரும் வீரர்களை எதிர்ப்பர். எதிர்த்த ஊராரைக் கொலை செய்துவிட்டு

ஆநிரைகளைக் கவருதலோடு ஊரையும் தீய்க்கு இரை யாக்குவர். இதனை ஊர்கொலை அல்லது எரியூட்டல் என்றனர். புறப்பொருள் வெண்பாமாலை,

''தொலைவிலார் விழத் தொடுகழல் ஆர்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு" என்கிறது.

வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்களின் ஊர்களைத் தீயிட்டுப் பொசுக்குவர், அவர்கள் சேமித்து வைத்திருக்கும் பண்டங்களைக் கொள்ளையடிப்பார்கள்,
தோற்றுப் போனவர்களின் விளைநிலங்களைப் பாழ்பண்ணுவார்கள், அவர்கள் கட்டியிருக்கும் கட்டிடங்களை எல்லாம் இடிப்பார்கள். போரினால் இத்தகைய கொடுமைகள் நடந்தன. இதனால் தான் பண்டைத் தமிழர்கள் ஆக்கிரமிப்புப் போரை வெறுத்தனர். தற்காப்புப் போரை மட்டும் மேற்கொண்டனர் என்பர். (சிதம்பரனார் சாமி, தொல்காப்பியத் தமிழர், ப-113) பகை நாட்டினை எரியூட்டி அழித்த செய்தியைப் புறம்- 6,7.16.23 முதலான பல பாடல்களில் காணலாம். இதனோடு கழுதைகளைப் பூட்டி உழுது நல்ல அரண்களைப் பாழ்படுத்துதல், குதிரைகள் பூட்டப்பெற்ற தேர்களை வயல்களில் விடுத்தல், யானைகளைக் கொண்டு வாவிகளை அழித்தல் முதலான அறமற்ற செயல்களும் நடைபெற்றுள்ளன. இதனை,

"வெள்வாயக் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனைந்தலை நல்லெயில்
புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமணி கவிகுளம் புகழத்.." (புறம்- 15)

என்கிற நெட்டிமையார் பாடல் எடுத்துரைக்கிறது. தொல்காப்பியம் இந்நிகழ்வை "வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும் என்னும் துறையில் அடக்குகிறது. இதனைப்போன்று, சேரமான் கணைக்கால் இரும்பொறை போரில் தோல்வியுற்று சோழன் செங்கண்ணனால் குடவாயில் கோட்டம் என்கிற இடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தான். அப்போது தனக்கு ஏற்பட்ட நீர் வேட்கையினால் சிறைக்காவலனிடம் நீர் வேண்டினான். அலட்சியமாகக் கொடுக்கப்பட்ட நீரினைப் பருகாது உயிர்விட்டான் சேரமான் கணைக்கால் இரும்பொறை அப்போது,

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன்று என்று வாளில் தப்பார்..(புறம் - 74)

என்கிற பாடலைப் பாடியதாகப் புறநானூறு கூறுகிறது. இங்கு மன்னனின் தன்மானம் என்கிற விழுமியம் பேசப்படுகிறது. இத்துறைக்கு முதுமொழிக் காஞ்சி என்று பெயரிட்டார் தொல்காப்பியர். எனினும், போரில் வென்றவர், தோற்றவரைக் கீழாக நடத்தும் அறமற்ற செயலை உய்த்துணர முடிகிறது.

**ஆகோள்**

ஆநிரைகளைக் கவருதலே ஆகோள் எனப்பட்டது. பாலை நிலத்து மக்களாகிய எயினர் முல்லை நிலத்து வளமான ஊர்களில் உள்ள கால்நடைகளைக் கொள்ளையடித்தமையால் ஆகோள் குறித்த பூசல் நிகழ்ந்தது என்பர். வறுமையின் காரணமாகவோ வளமின்மை காரணமாகவோ பூசல் நிகழவில்லை. "முல்லை நிலப் பகுதியில் சங்ககாலத்தில் ஆநிரையே ஒப்பற்ற செல்வமாகக் கருதப்பட்டது. ஒப்பற்ற செல்வத்தைத் தனதாக்கிக் கொள்ளவே மறவர்கள் பூசலில் ஈடுபட்டனர். ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக எழுந்த பெரும் போர் அல்ல இவை. ஆகோளை மையமாகக் கொண்டு நிகழ்ந்ததால் இதனை அப்பகுதி மக்கள் களவுத்தொழில் என்று குற்றம் சாட்டவில்லை" என்பார் பூங்குன்றன் (தொல்குடிவேளிர் வேந்தர், ப-14)

''நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போல" (குறுந் -80)

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய அதியமானின் மகன் எழினி. இவன் போரில் கவர்ந்து வந்த ஆநிரைகளைப் பெரிதும் காத்தான் என்னும் செய்தியும்.

“மா இரு முள்ளூர் மன்னன் மா ஊர்ந்து“ (நற்-291) முள்ளூர் மன்னன் காரி குதிரை மேல் சென்று இரவு நேரங்களில் ஆநிரைகளைக் கவர்ந்து சென்றான் என்னும் செய்தியும் மன்னர்கள் ஆநிரை கவர்தலாகிய குறும்போரினைச் செய்தனர் என்பதனை எடுத்துரைக்கிறது. மன்னர்கள் மட்டுமின்றி மறவர்களும் இக்குறும் போரினை மேற்கொண்டனர் என்பதனை (அகம் -35,53,63,67) முதலான பாடல்கள் மூலம் அறியலாம்.

''ஆகோள் மூதூர்க் கள்வர் பெருமகன்
ஏவல் இளையர் தலைவன் மேவார்
அருங் குறும்பு எறிந்த ஆற்றலொடு'' (அகம்-342)

குறும்பு, மிளை, அரண், அருப்பம், அருப்பு ஆகிய சொற்கள் சங்க இலக்கியங்களில் காவல்கோட்டை, பாதுகாப்பிடம் ஆகிய பொருட்களில் எடுத்தாளப் பெற்றுள்ளது. தொல்குடிகள் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டு தங்களுக்கும் தங்கள் உடைமைகளுக்கும் பாதுகாப்பு வேண்டும் எனக்கருதி உருவாக்கப்பட்ட பாதுகாப்பு இடங்களைத்தான் இச்சொற்கள் தொடக்கத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும்... மேலும் குறும்பு என்ற சொல் தொடக்கத்தில் வலிமை என்ற பொருளிலும் கையாளப்பட்டிருக்கிறது. மலைபடுகடாத்தில் வலிமை மிக்க பாம்பு எனக்குறிப்பிடும் போது குறும்பு என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பிற்கால அடைவில் குறும்பு வலிமையுடையோர் காத்து நிற்கும் இடத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்பார் பூங்குன்றன் (மு.கூ.நூ.ப-19) இதனை மெய்ப்பிக்கும் விதமாக "போர்ப் பறை கேட்டதும் மக்கள் தக்க காவல் இடத்தை அடைந்து விடுவர். அவ்வாறு அடைய முடியாத ஆவும் பிறவும் காணப்படுமேல் அவைகளைப் படையெடுத்து வருவோரே அப்புறப்படுத்த முயல்வர். இவ்வாறு மக்களுக்குப் பயன்படும் ஆநிரைகளை அப்புறப்படுத்தலே

பின்னர் போர்த் தொடக்கத்தின் முதல் நிகழ்ச்சியாகி விட்டது என்பார் இலக்குவனார்." (மு.கூ.நூ. ப-140)

**தந்துநிறை**

ஆநிரைகளைக் கவர்ந்து வந்து பாதுகாப்பான மன்றத்தில் நிறுத்துவது தந்து நிறை எனப்படும். மன்றம் அல்லது மன்று என்பது ஆநிரைகளை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தைக் குறித்தது. "மன்றம் என்ற சொல் திராவிட மொழிகளில் தமிழ் தவிர மலையாளத்தில் மட்டும் வழக்கில் உள்ளது. மலையாளச்சொல்லும் தமிழ்ச்சொல்லும் ஒரே பொருளைத் தருகின்றன. மன்னு + அம் = மன்றம் எனப்பிரித்து அதன் வேர்ச்சொல்லான மன் என்பதை நிலையானது என்று பொருள் கொள்கின்றனர். மன் என்ற வேர்ச்சொல் மன்னன், மன்று ஆகிய சொற்கள் உருவாகக் காரணமாயிற்று. மனிதன் என்ற சொல்லும் மன் என்ற வேர்ச்சொல்லிலிருந்து வந்தது என்பர்".(பூங்குன்றன், மேலது,ப-36) சங்க இலக்கியத்தில் மன்று பற்றிக் கூறும் போதெல்லாம் அங்கு மாட்டு மந்தை தங்கியிருந்தது என்றுதான் பாடல்கள் கூறுகின்றன. "கன்று பயிர் குரல மன்று புகுதரும" (அகம்-14). "கன்று காணாது புன்கண்ண செவிசாய்த்து மன்று நிறை பைதல் கூர்'' ( அகம்-63)

மன்றுக்கு இணையாக தொழு என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது ஆனால் இது வட்டார வழக்காகவே இருந்துள்ளது. குறிப்பாக தொண்டை நாடு. எருமை நாடு, வடுகர் நாடு முதலான பகுதிகளில் மட்டும் வழக்காக இருந்துள்ளது. (பெரும்பாணாற்றுப்படை:185) மிகக் குறைந்த அளவிலே இவ்வழக்குச் சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. மன்றம் மன்னர்களைப் (குழுத்தலைவர்களைப்) புதைக்கும் இடமாகவும் கூறப்பட்டிருக்கிறது. மன்னர் மறைந்த தாழி வன்னி மன்றத்து விளங்கிய நாடே" (பதி: 44) மணிமேகலையிலும் சக்கரவாளக் கோட்டமுறைத்த காதையில் வன்னி மன்றம், வாகை மன்றம், வெள்ளி மன்றம். இரத்தின மன்றம், வெள்ளிடை மன்றம் என்று சில மன்றங்கள் இருந்துள்ளதை எடுத்துரைக்கும். இதன்வழிப் புகழ் மிக்கவரைப் புதைக்குமிடமாகவும் கருத இடமுண்டு. புறம் 52, அகம் 307 பாடல்கள் மன்னர்களைப் புதைத்த செய்தியைக் கூறுகின்றன. எவ்வாறாயினும் மன்று பற்றிய குறிப்புகள் எழுபத்தைந்து விழுக்காடு ஆநிரை, ஆட்டு நிரை தங்கியிருந்தமை பற்றிய குறிப்புகளாகவே பயின்று வரக்காண முடிகிறது.

**பாதீடு**

பாதீடு என்பது பகுத்துக்கோடல் எனப்பொருள்படும். சங்க இலக்கியங்களில் பாதீடு பற்றிய செய்திகள் அதிகமாகக் காணக்கிடைக்கின்றன. புறப்பொருள் வெண்பாமாலை இதனை ஒரு துறையாக வகுத்துள்ளது. வீரர்கள் கவர்ந்து வந் த ஆநிரைகளை மற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பர். இதனை அகம் 89 மற்றும் பின்வரும் பாடலும் கூறுகிறது.

"இரவுக் குறும்பு அலற நூறி நிரைபகுத்து

இருங்கல் முடுக்கர்த் திற்றி கெண்டும்

கொலைவில் ஆடவர் போர் (அகம் -97)

புறப்பொருள் வெண்பாமாலையில் நடைபெற்ற போரில் வெற்றிக்கு உறுதுணையாக விளங்கிய வீரர்களின் தகுதியறிந்து பொருட்கள் பாதீடு செய்யப்பட்ட செய்தி காணக்கிடைக்கின்றது."ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்றாய்ந் துரைத்தார்க்கும் புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் விள்வாரை மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரிற் கூறிட்டார் கொண்ட நிரை. "இதன்வழி ஒற்றாய்ந்தவர்கள், நல்நிமித்தம் பார்த்தவர்கள். நற்சொல் கூறியவர்கள். புகழ்பாடிய புலவர்கள், வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு போரிட்ட மறவர்கள் என அவரவர் நிலைக்கேற்ப பாதீடு வழங்கப்பட்டுள்ளதை உணரலாம். போரின் தன்மை கோரமுடையதாக இருந்தாலும் மக்கள் அறத்தோடு பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்ததை அறிய முடிகிறது. இது சமுதாயத்தினர் கைக்கொள்ள வேண்டிய மானுட விழுமியமாகும்.

தரநிலைச் சமுதாய அமைப்பில் அனைவரும் சமதகுதியைப் பெற இயலாத நிலையில் தலைவனே உயர்ந்த தகுதியைப் பெற்றிருப்பான். அவனே மக்கள் அனைவரையும் வழி நடத்தும் பொறுப்பைப் பெற்றவனாவான். அதனோடு பெ ரும்பாலான சமுதாயங்களில் உணவுப் பொருட்களைப் பிரித்துக் கொடுக்கும் உரிமையும் கொண்டிருப்பான். விளைபொருட்கள், வேட்டையில் கிடைப்பவை இன்னும் பிற வழிகளில் கிடைப்பவை ஆகிய அனைத்திலும் ஒரு பகுதி தலைவனைச் சென்றடைய வேண்டும். அவற்றை அவன் பகுந்தளிப்பான்."(பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல். ப-308) ஆநிரை கவர்தலில் பகிர்ந்தளிக்கும் உரிமையை ஆணுக்குக் (வீரனுக்கு) கொடுத்தார் தொல்காப்பியர். ஆனால் தொல்குடிச் சமுதாய வாழ்க்கையில் உற்பத்திப் பொருளின் மீதும் அதனைப் பகிர்ந்தளிப்பதிலும் தாய் (பெண்) ஆதிக்கம் செலுத்தியதை,

"கானவன் எய்த முளவுமான் கொழுங்குமுறை

தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு

காந்தள் அம் சிறுகுடிப் பகுக்கும்.. (நற்-85)

என்ற பாடல் வழி அறிய முடிகிறது. கொடிச்சி சங்ககால வாழ்க்கையில் தெய்வத்தன்மை மிக்கவளாகக் காட்டப்பெறுகிறாள். குடிமுறை பகுக்கும் (நற்-336) என்ற பாடலும் குடிக்குரிய பங்கினைப் பெண்ணே பகிர்ந்தளிக்கும் முறையையும், தாய்வழிச் சமூகத்தில் பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பிடத்தையும் இப்பாடல்கள் வழி அறியலாம். இவை மட்டுமின்றி "போரில் வென்ற குலத்தலைவர்கள் வேந்தர்களாகி வெல்லப்பட்டவர்களின் மாடுகளையும் நிலங்களையும் போர்க் கைதிகளையும் தம் படையிலிருந்த படைத் தலைவர்களுக்குக் கொடுத்தனர். தோற்றுப்போன குலத்தினரை வெற்றிபெற்ற ஊரில் குடியமர்த்தி வினவலராக ஆக்கினர். இவர்களைக் கடைசியர், புலையர், கோடியர், துடியர்,

பறையர், பாணர், கடம்பர் என இலக்கியங்கள் சுட்டுகின்றன" என்பார் ஆ. இரவி கார்த்திகேயன் (தமிழ்ச் சமூகமும் தெய்வங்களும், ப-43)

**நடுகல்**

பண்டைத் தமிழரிடம் போரிலே வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வணங்கும் வழக்கம் இருந்தது. அந்தக் கற்களுக்குப் படையலிட்டு வணங்கி விழாவெடுத்து வழிபாடு செய்தனர் என்பதனைத் தொல்காப்பிய நூற்பா வழி (புறத்திணை - 5) அறியலாம். "தமிழர்கள் வெகு காலமாக வெறுங்கல்லை நட்டுத் தெய்வமாக வணங்கினார்கள். சிற்பத் தொழிலிலே தேர்ந்த பின் மாண்டவர்களின் உருவங்களை மரத்திலும், கல்லிலும் செதுக்கக் கற்றுக் கொண்ட னர். அந்த உருவங்களை வைத்துத் தெய்வமாக வழிபாடு செய்தனர். முதலிலே மரத்தடிகளிலே இவ்வுருவங்களை வைத்து வணங்கினார்கள். பிறகு அவைகளுக்குக் கோயில்கள் கட்டத்தொடங்கினர். உலகங் கண்டு வியக்கும்படித் தமிழர்கள் சிற்பக்கலையிலே சிறப்படைந்ததற்கு இந்தக் கல் நாட்டும் வழக்கம் காரணமாயிருந்தது என்பார் சிதம்பரனார். (தொல்காப்பியத் தமிழர், பக்- 95 .96) சமூக வாழ்க்கை நூல் கோட்பாடு என்னும் நுநூலில் ஹர்பர்ட் ஸ்பென்சர், "எல்லாக் கோயில்களின் தோற்றத்தையும் ஆராய்ந்து கொண்டே செல்வோமே யானால், அவை இறந்தவர்களின் சமாதியாகவோ அல்லது காணிக்கை செலு த்தப்பட்டு வழிபட்ட புனித இடமாகவோ சுருங்கிவிடும். (கோவைவாணன், மு.கூ.நூ., ப- 42) என்று கூறிய கூற்று இக்கருத்திற்கு வலுவூட்டுகிறது. போரிலே இறந்துபட்ட வீரரது நடுகல்லைக் கடவுளாகக் கருதி வழிபட்டதைக் கீழ்வரும் புறநானுற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.

"ஒன்னார்த் தெவ்வர் முன்னின்று விலக்கி
ஒளிரேற்று மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்ததெனக்
கல்லே பரவி அல்லது
நெல்லுக் குத்துப் பரவுங் கடவுளுமிலவே" (புறம்-335)

இந்நடுகல் முறையானது பண்டைக் காலத்தில் தமிழ் மக்களிடையே நிலவிய இழவு வினைகள் பற்றிய நம்பிக்கைகளுடன் நெருங்கிய தொடர்புடையது. நடுகல் வழிபாடு தோன்றியதைப் போன்று கோயிற்கட்டிடக் கலையும் இழவு வினைகளை ஒட்டியே வளர்ந்திருக்கலாம் என அறிஞர் கருதுவர் என்பார் க. கைலாசபதி. (பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். ப-49) மேலும், அவர் இறப்பானது வாழ்க்கையின் முடிவைக் குறிப்பதில்லை. ஒருவகை வாழ்க்கை யில் இருந்து மற்றொரு நிலைக்கு மாறுவதையே குறிக்கிறது. பொதுவாக இறந்த மூதாதையரைப் போற்றி அவர்களுக்குச் செய்யும் சிறப்பு முறையிலிருந்தே பிற்காலத்தில் போரில் இறந்துபட்ட வீரரை வழிபடும் முறை தோன்றியது என்கிறார்.

போரில் இறந்ததால் அவன் துஞ்சினான் என்று மங்கல வழக்கில் கூறினர். அவன் துஞ்சிய (வீழ்ந்த) இடத்திலே அவனது தகுதிக்கும் புகழுக்கும் ஏற்ப பெரிய பள்ளிப்படை

எழுப்பினர். மலரும். மதுவும், ஊனும், சோறும் படையலாகப் படைக்கப்பட்டது. சிறு தெய்வங்களான ஐயனார், மதுரை வீரன், இருளன், கருப்பன், நொண்டி முதலியன நடுகல் தெய்வங்களை ஒத்துள்ளன என்பது இங்கு நினைவு கூரத்தக்கது ஆகும். நடுகல்லானது செங்குத்தாக நாட்டப்பெற்ற கல்லாயிருந்தது. அக்கல்லில் ஓர் உருவம் செதுக்கப்பட்டு, வீரனது பெயர். போரின் தன்மை, பெருமை பொறித்து, மயில் பீலி சூட்டி, நெய் சொரிந்து, கள், செம்மறிக்கறிக் குட்டி இறைச்சியையும் பலியாகப் படைத்தனர். இதனைப் புறம் - 232 மற்றும் கீழ்வரும் அகப்பாடலடிகள் வழியும் அறியலாம்.

"நடுகல் பீலி கூட்டித் துடிப்படுத்துத் தோப்பிக் கள்ளோடு துருஉப்பிலி கொடுக்கும்" (அகம்-35)

"மறவர் பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'' (அகம்-67)

நடுகல் வழிபாடே பிற்காலத்தில் சிறுதெய்வ வழிபாடாக மாற்றம் பெற்றது என்பார் க. கைலாசபதி. மேலும்,"போரிலே இறந்த பல சாதாரண மறவரும் வீரரும் தம்மை வழிபடுவோரைப் பாதுகாக்கும் சிறு தெய்வங்களாக மண்ணுலகிலேயே கல்லாகவும் மரமாகவும் கற்குவியலாகவும் மண் படிவங்களாகவும் நின்றனர்.(பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். ப-56) இதைப்போன்று, நடுகல் வழிபாடு அகால மரணத்துடன் தொடர்புடைய நாட்டார் வழிபாடு. ஒரு வகையில் வீரத்தைக் காட்டிய ஆண்களுக்காக உருவாக்கப்பட்ட வழிபாடு. என்பார் அ கா. பெருமாள். (தமிழகப் பண்பாடு. ப-75) இக்காலத்திலும் உருவம் செதுக்கப்படாத வெறுங்கற்கள் கடவுளர்களின் பிரதிநிதிகளாகக் காட்சியளிப்பதைக் காணலாம். அவைகளுக்கு மாடன், காடன், வீரன், சூரன் எனப் பெயரிட்டு அழைக்கும் வழக்கம் இருந்துள்ளது. இதனை மெய்ப்பிக்கும் விதமாக.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல்
என்று இருமூன்று மரபின் கல்லொடு புணர்

காட்சி - கல்லைத் தேர்தல்
கால்கோள் - கல்லை நடுவதற்கான பணிகளைத் தொடங்குதல்
நீர்ப்படை - நீரினால் சுத்தம் செய்தல்
நடுகல் - கல்லை நடுதல்
பெரும்படை - வீரர்கள், கல்லுக்கு மரியாதை செய்தல்
வாழ்த்தல் - நடப்பட்ட கல்லில் வீரனின் ஆன்மா இருப்பதாக எண்ணி கல்லை வாழ்த்துதல்

வீரர்களுக்குக் கல்நாட்டிக் கொண்டாடிய இந்தப் பழக்கத்திலிருந்து தான் பத்தினிப் பெண்டிருக்குக் கல் நட்டு வழிபாடு செய்யும் முறை வந்தது. அறிஞர்கள், துறவிகள்,

அரசியல் தலைவர்களுக்குக் கல் நடும் வழக்கம் பிறந்தது என்பதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

**உண்டாட்டு**

பண்டைத் தமிழர் வாழ்வில் போர் என்பது ஒரு தொடர் நிகழ்வாக நடை பெற்றிருக்கின்றது. அப்போரின் முதல் நிகழ்வாகக் கைக்கொள்ளப்பட்ட ஆநிரை கவர்தலில் வென்று வந்த வீரர்கள் மகிழ்ச்சியில் கள்ளுண்டு மகிழ்தல் உண்டாட்டு எனப்படுகிறது. இது களியாட்டம், கொண்டாட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நிகழ்வில் வீரர்களினன் போர்த் திறமை பாராட்டப்படுகிறது.

"புல்லார் இனநிரை செல்புறம் நோக்கி" (புறம் -257)

"ஆதரக் கழுமிய துகளன்

காய்தலும் உண்டு அக்கள் வெய்யோனே'' (புறம் 258)

நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்" (புறம் -262)

"பிழிமகிழ் வல்சி வேண்டமற்று இது

கொள்ளாய் என்ப கள்ளின் வாழ்த்தி (புறம் 269)

"நனைமுதிர் சாடி நறவின் வாழ்த்தி" (புறம் - 297)

புறநானூற்றில் உள்ள நானூறு பாடல்களில் மேற்கூறப்பட்ட ஐந்து பாடல்களில் மட்டுமே உண்டாட்டு (கள்ளுண்டு கழித்த) நிகழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொடை

கொடு என்னும் வேர்ச்சொல்லிலிருந்து பிறந்ததே கொடை என்பதாகும். ஈகை, தருமம், தானம் முதலியன ஒத்த சொற்களாகும். உப்பு. எள். நெய், நெல், பசு. பூமி, பொன், ஆடை, வெள்ளி, வெல்லம் போன்றவற்றை கொடை என்பதன்
தமிழ் விளக்கமாக அகர முதலி தமிழ் அகராதி விளக்கம் தருகின்றது. சங்க கால மன்னர்களும் கொடைத்திறம் மிக்கவர்களாக இருந்துள்ளனர் என்பதற்குச் சங்கப்பாடல்களுள் சான்றுகள் ஏராளம் உண்டு. அம்மன்னர்களும் கடையேழு வள்ளல்களாகப் பிரித்துப் போற்றப்பட்டனர். பாரிக்கு நிகரான கொடை வள்ளல் எவருமில்லை (புறம் 204) என்பதை புறநானூறு வழி உய்த்துணரலாம்.

**பாலினச் சமத்துவமற்ற நிலை**

தொல்காப்பியப் புறத்திணையியல் அக்காலப் பண்பாட்டினை, மன்னர்களின் கொடைச் சிறப்பை, வாழ்வியலை எடுத்துரைக்கின்றன என வியந்து போற்றினாலும் பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட இடம் என்னவோ மிகவும் கீழான நிலையிலே இருந்துள்ளது. தொல்காப்பியர் ஆண் பெண் சமத்துவத்தை ஒத்துக்கொள்ளவில்லை. எனவே தான் ஆண்மை, பெண்மையை எதிரெதிர் பண்புடையவர்களாகச் சுட்டிச்செல்கிறார். பெண்களுக்குச் சில கடமைகளையும்

ஆண்களுக்குச் சில உரிமைகளையும் வழங்குகிறார். இது அக்காலப் பாலினச் சமத்துவமின்மையைப் பறைசாற்றுகிறது.

"கணவன் இறந்தவுடன் கற்புடைய மனைவி தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டும் (கணவன் இறப்பிற்குக் காரணமான வேலினால் தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டும் ஆஞ்சிக் காஞ்சி) அல்லது இறந்த கணவன் தலையோடு தன் முகத்தையும் மார்பையும் சோத்துக் கொண்டு மாய்ந்துபட வேண்டும் (முது மொழிக் காஞ்சி) அல்லது இறந்த கணவனின் ஈமத்தீயில் இறங்க வேண்டும் பாலைக் காஞ்சி) இவையெல்லாம் கணவனாகிய ஆண்மகனுக்குச் சுட்டப்பட

வில்லை. காதலியை இழந்த தபுதார நிலை (தொல் - 1028) மனைவியை இழந்த கணவன் வருந்தி நின்ற நிலையை மட்டுமே அது குறிக்கிறது என்பது இரா. பிரேமா அவர்களின் கருத்தாகும். (பெண் எழுத்துக்களின் அரசியல். ப-45) போரில் வீரமரணமடைந்த ஆணுக்கு நடுகல் வைத்துக் கடவுளுக்கு நிகராக வழிபடும் முறையைக் கூறும் தொல்காப்பியம் இறந்து பட்ட கணவனோடு

உயிர்த்தியாகம் செய்த மனைவியைப் போற்றத் தவறிவிட்டது.

**முடிவுரை**

புறத்திணையியல் என்றவுடன் வெறும் போர்ச் செய்திகள் மட்டும் இடம்பெறும் எனக்கூறுதற்கில்லை. மாறாக உண்டாட்டு, (கள்ளுண்டு களித்தல்) கொடை, நடுகல் வழிபாட்டு முறைகள் மூலம் அறியக்கிடக்கும் பண்டைத் தமிழர்தம் பண்பாடு. வாழ்வியல் விழுமியங்களைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகவும் கருதலாம். ஒன்பது திணைகளை வகுத்து ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இலக்கணம் வகுத்து அத்திணைகளுக்குரிய மன்னர்களுக்கு அடையாள மாலை, காவல் மரம், அறிவித்து வாழ்ந்த அக்கால மக்களின் வாழ்வியல் நினைந்து இன்புறத்தக்கதே ஆகும்.

**ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்**


1. இலக்குவனார், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, முதல் பதிப்பு 1962.
2. இராமகிருஷ்ணன்.ஆ., தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், சர்வோதையா இலக்கியப் பண்ணை, மதுரை. முதல் பதிப்பு 2005
3. இரவி கார்த்திகேயன், தமிழ்ச் சமூகமும் தெய்வங்களும், NCBH வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு மே 2023.
4. கோவைவாணன், சங்க இலக்கிய மெய்யியல்,
5. கைலாசபதி.க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், காலச்சுவடு பதிப்பகம், முதல் பதிப்பு 1966.

6. சிதம்பரனார் சாமி., தொல்காப்பியத் தமிழர், NCBH வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு ஏப்ரல் 2002.
7. சுப்பிரமணியன் ந., சங்ககால வாழ்வியல், NCBH வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு 1986.
8. தமிழண்ணல்(உ.ஆ),தொல்காப்பியம்,பொருளதிகாரம் (தொகுதி-2), மீனாட்சி புத்தக நிலையம், மதுரை,முதற்பதிப்பு - 2010,
9. பக்தவத்சல பாரதி., பண்பாட்டு மானுடவியல்,மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். திருந்திய பதிப்பு - 2016.
10. பிரேமா இரா., பெண் எழுத்துகளின் அரசியல், அறிவுப் பதிப்பகம், முதல் பதிப்பு டிசம்பர் 2007.
11. பூங்குன்றன் ர., தொல்குடி வேளிர் வேந்தர், NCBH வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு 2016.
12. பெருமாள் அ. கா.,தமிழகப் பண்பாடு, NCBH வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு 2012.
13. . புறநானூறு, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

*Reference Books*

1. *Lakshmanar, Literature as a Life of Tamil, Valluvar Publishing House, Pudukkottai, first edition 1962.*

2. *Ramakrishnan.A., History of Tamil Nadu and Tamil Culture, Sarvodaya Literary Farm, Madurai. First edition 2005*

3. *Iravi Karthikeyan, Tamil Society and Deities, NCBH Publication, Chennai, First edition May 2023.*

4. *Kovaivanan, Sangam Literary Philosophy,*

5. *Kailasapathi.K., Ancient Tamil Life and Worship, Kalachuvadu Publishing House, First edition 1966.*

6. *Chidambaranar Sami., Tolkappiyat Tamil, NCBH Publication, Chennai, First edition April 2002.*

7. *Subramanian N., Sangam Life, NCBH Publication, Chennai, First edition 1986.*

*8. Tamilannal (U.A.), Tolkappiyam, Economic Policy (Volume-2), Meenakshi Bookstore, Madurai, First edition - 2010,*

*9. Bhaktavatsala Bharathi., Cultural Anthropology, Meiyappan Publishing House, Chidambaram. Thirundiya Edition - 2016.*

*10. Prema I., The Politics of Women's Writings, Arivup Publishing House, First Edition December 2007.*

*11. Poongundran R., Tholkudi Velir Vendar, NCBH Publication, Chennai, First Edition 2016.*

*12. Perumal A. Ka., Tamil Culture, NCBH Publication, Chennai, First Edition 2012.*

*13. . Purananuru, New Century Book house, Chennai.*

ARAN International e-Journal of Tamil Research
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com